**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **சக்திவேல்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**8.8.2024 OS.No. 24/2023 வா.சா.1 சக்திவேல் ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் இந்த வழக்கின் வாதி தரப்பு1–ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிரமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 09.06.2015–ம் தேதியிட்டு தாவா சொத்துக்களுக்கு ராஜாமணி பெயரில் உள்ள கணினி 10(1) கணினி நகல் தாக்கல் செய்கிறேன். ( **தாவா சொத்துக்களுக்கு ராஜாமணி பெயரில் உள்ள கணினி 10(1) கணினி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்துக்களை ராஜாமணி வாதிக்கு இனாம்செட்டில்மெண்ட் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(தாவா சொத்துக்களை ராஜாமணி வாதிக்கு இனாம்செட்டில்மெண்ட் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.